

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.08.2024) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய முஸ்லீம் தனிநபர் சட்ட வாரியத் தின் பொதுச் செயலாளர் முகமது ஃபஸ்லூர் ரஹிம் முஜாதிதி, தமிழ்நாடு ஜமாத்துல் உலமா பேரவை தலைவர் காஜா மொஹிநுதீன் பக்வி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வக்ஃப் வாரிய சட்ட திருத்த மசோதா தொடர்பாக சந்தித்துப் பேசினார்கள். இந்த சந்திப்பின் போது. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் எப்.எச்.ஜவாஹிருல்லா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை முதன்மைச் செயலாளர் சி.விஜயராஜ் குமார், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் (மு.கூ.பொ) தாரேஸ் அகமது, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் உறுப்பினர் திருமதி ஏ.எஸ்.பாத்திமா முசாபர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, 59 புதிய பேருந்துகள் இயக்கத்தை திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் நேற்று (21.08.2024) தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திண்டுக்கல் ஆர்.சச்சிதானந்தம், தேனி தங்க.தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் ச.காந்திராஜன், பெரியகுளம் கே.எஸ்.சரவணக்குமார், ஆண்டிப்பட்டி ஏ.மகாராஜன், மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாஸ்கரன், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ச.ராஜப்பா, திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ராஜா, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை மண்டல மேலாண்மை இயக்குநர் இரா.சிங்காரவேலு, மாநகராட்சி மண்டல தலைவர்கள் ஜ.கார்த்திக், பிலால் உசேன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் கோட்ட பொது மேலாளர் அ.சசிகுமார் உட்பட பலர் உள்ளனர்.

### பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து

# கடலூர் மாவட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு!

## ஆசிரியர்-மாணவர்களின் கோரிக்கைக்கு உடனடி நடவடிக்கை! அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

கடலூர், ஆக. 21-

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுப் பயணத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் (20.8.2024) பல்வேறு பகுதியில் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து தொடர் ஆய்வுகளை மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்கு முக்கி யத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். கொரோனா தொற்று பரவல் காலத்திலும் பள்ளி மாணாக்கர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் இல்லம் தேடி கல்வி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு பயனடைந்தனர்.

மேலும், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணிகள் நடைபெற்று வருகிறது. மாணவர்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் நான் முதல்வன் திட்டம், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம், 8 வயதுக்கு உட்பட்ட அரசுப் பள்ளி மாணவர்கள் அடிப்படை கணிதத் திறனுடன், பிழையின்றி எழுத, படிப்பதை உறுதிசெய்யும் விதமாக எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பள்ளிக் கல்வித்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநிலத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் அரசின் வாயிலாக பள்ளிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து 234ஃ77 ஆய்வுப் பயணத்தின் கீழ்; நேற்று (20.08.2024) நெய்வேலி, பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, கடலூர், புவனகிரி, காட்டுமன்னார்கோயில், திட்டக்குடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பள்ளிகள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுவரும் புதிய தகைசார் பள்ளிக் கட்டுமானப் பணிகளையும், மாணவர்களுக்கான புதிய விடுதி கட்டுமானப் பணிகளையும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வில் மாணவர்களுக்கு நடைபெற்ற வகுப்பினை பார்வையிட்டு அவர்களின் கற்றல் திறன் குறித்து ஆய்வு செய்தார். பள்ளிகளில் ஆசிரியப் பெருமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அலுவலர்களுக்கு ஆணையிட்டார். மேலும், பள்ளி வகுப்பறைகள் மற்றும் வளாகங்கள் தூய்மையாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அவ்வகையில் நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் ஆய்வுக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க உடனடி நடவடிக்கையாக அங்குள்ள புதர்கள் முற்றிலும் அகற்றப்பட்டு தூய்மையான பள்ளி வளாகம் ஏற்படுத்தப்பட்டது.

### இடை நுழைவு ஆட்சேர்ப்பை

# ஒன்றிய அரசு திரும்பப் பெற்றது சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, ஆக.21-

இந்தியா கூட்டணியின் கடும் எதிர்ப்பிற்குப் பிறகு இடை நுழைவு ஆட் சேர்ப்பை ஒன்றிய அரசு திரும்பப் பெற்றுள்ளது சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி என கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சமூக நீதிக்கு வெற்றி. நமது இந்தியா கூட்டணி யின் கடும் எதிர்ப்பிற்குப் பிறகு, இடைநுழைவு ஆட்சேர்ப்பை (Lateral Entry Recruitment) ஒன்றிய அரசு திரும்பப் பெற்றுள்ளது.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு வடிவங்களில் இடஒதுக்கீட்டை பலவீனப்படுத்த முயற்சி செய்யும் என்பதால், நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.**

**இட ஒதுக்கீட்டுக்குத் தன்னிச்சையாக விதிக்கப் பட்டுள்ள 50 விழுக்காடு உச்சவரம்பு உடைக்கப் பட வேண்டும். மேலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நாடு முழுவதும் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியது அவசியம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மதுரை மாநகர் 38 வது வட்டக் கழக முன்னாள் செயலாளர்

# பி.ஆர்.சி.ரமேஷ் இல்லத் திருமண விழா! அமைச்சர் பி.மூர்த்தி தலைமை!

## கோ.தளபதி - அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் - பொன்.முத்துராமலிங்கம் பங்கேற்பு!

மதுரை, ஆக. 22 -

புறநகர் கிளை தொ.மு.சா செயலாளர் முன்னாள் மதுரை மாநகர் 38. வட்டக் கழக செயலாளர் TNSTC முன்னாள் மாநகர் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் பி.ஆர்.டி. ரமேஷ் இல்ல திருமண விழா நாளை (23.08.2024 - வெள்ளிக்கிழமை) ஸ்ரீராம் மஹால் குலமங்கலம் மெயின் ரோடு, கோசா குளத்தில் நடைபெறுகிறது.

திருமணத்தை வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நடத்திவைக்கிறார்.

விழாவிற்கு கோ.தளபதி (சட்டமன்ற உறுப்பினர் மாவட் டக் கழக செயலாளர் மதுரை மாநகர்) முன்னிலை முனைவர் பி.டி,ஆர். பழனிவேல் தியாக ராஜன் ( தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்) ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் உயர்மட்ட செயல் திட்ட குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் மேயர் இந்திராணி பொன் வசந்த் . தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வன். தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், ஏ கே எஸ் விஜயன், எம்பி தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி டி.க.எஸ். இளங்கோவன், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ வேலுச்சாமி, மாநில தணிக்கை குழு உறுப்பினர் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மாவட்டக் மணிமாறன். தமிழரசி ரவிக்குமார்.. சட்டமன்ற உறுப்பினர் ஆ வெங்கடேசன்.. சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வி பி கலைராஜன். மாநில இலக்கிய அணி அமைப்பாளர் எம் ஜெயராம். தலைமை செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம்.. தலைமை செயற்குழு உறுப்பினர் பெ. குழந்தை வேலு.. உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் மா ஒச்சு பாலு.. மாவட்ட அவை தலைவர்

நேருபாண்டி .மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சின்னம்மாள்.. மாவட்ட துணைச் செயலாளர் அதனை செந்தில்குமார். மாநில மாணவரணி துணை செயலாளர் ஜே மூவேந்திரன்.. மாவட்ட துணைச் செயலாளர் சரவணன். பகுதி செயலாளர் சிம்மக்கல் எஸ் ஆர் கோபி ஜிபி ராஜா .மாநில இளைஞரணி துணைச் செயலாளர் மருது பாண்டியன். ஆனையூர் பகுதி கழகச் செயலாளர் மேலூர் அல் போன்ஸ். டி என் எஸ் டி சி தோமுசா பொதுச் செயலாளர் சேங்கை. மாறன் சிவ கங்கை மாவட்ட துணைச் செயலாளர் சௌந்தர்ராஜன். மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதி வெங்கடேஷ் . மாநகர் தி.மு.க. வரவேற்புரை இரா ரவீந்திரன்.. பொதுக்குழு உறுப்பினர் பொன் சேதுராமலிங்கம்.. பொதுக்குழு உறுப்பினர் மாவட்டக் கழக நிர்வாகிகள் பிடி மணிமாறன் . வைகை பரமன். முத்து கணேசன். செய்யது அபுதாகிர். ஆறுமுகம். விஜய லட்சுமி. பாண்டியன். செல்வம். கே பி பூமிநாதன்.

பகுதி கழக செயலாளர் புண்ணியமூர்த்தி. ராதாகிருஷ்ணன். அறிவு நிதி. குறும்பன். எஸ்.எஸ். மாறன். ஜீவன் பா.ரமேஷ் குமார், ஆர் எம் முத்து. கு காவேரி. போஸ் முத்தையா. எஸ்.வி.சுதன் மண்டல தலைவர்கள் சரவண புவனேஸ்வரி. எம் முகேஷ் சர்மா. வாசுகி சசிகுமார். பாண்டி செல்வி மிசா பாண்டியன். சுபிதா விமல்.

வட்டக் கழகச் செயலாளர்கள் வேலு. ஆர் ஆர் மகேந்திரன். பிஎம் மருது. மாதவன். ஆபித் .பவர் மணிகண்டன். முத்து மோகன். கருப்பு ராஜ். ரஞ்சித் குமார். காத்தவராயன். பவுன்ராஜ் .நல்ல காமன். மாயம் பெருமாள் .சுரேஷ். செல்வராஜ் .பிரேம் குமார் .ராஜேஷ் கண்ணா. ஆட்டோ சுரேஷ். கோசா குளம் முருகேசன். தவமணி. சீனி ரமேஷ். நாக ஜோதி சிவா. சுரேஷ். ஜீன்ஸ் சிவா. காமராஜ் . ராஜேஷ். அசோக்குமார். செந்தில் குமார் .ரவிச்சந்திரன். விளாங்குடி தனசேகர். விளாங்குடி தேவராஜ். தஞ்சை மதி. அழகு சுந்தரம். யோகராஜ். ஆ ராம் பிரசாத் .ஏ கே செந்தில். பாலாஜி. பைபாஸ் பால சிவகுமார். இரா ராஜேந்திரன். ஓ வேல்முருகன்.

மாமன்ற உறுப்பினர்கள் விஜய மௌஸ் மீ. விஜயா குரு .மார்நாடு. கஜேந்திரன் .ஆழ்வார். முத்துமாரி. அந்தோணியம்மாள். பொன் வளவன். நாகநாதன் .முரளி கணேஷ். ஜெயராஜ். மகா லட்சுமி நவகோடி. நாகநாதன். லக்சிகா ஸ்ரீ. செல்வி கார்மேகம். பாண்டிச் செல்வி. ஜெகநாதன்.

அரசு வழக்கறிஞர்கள் வீர கதிரவன். பழனிச்சாமி. லிங்கதுரை R.M அன்பு நிதி .சிவக்குமார். ஜவகர். சாரங்கன். கருணாநிதி பன்னீர் செல்வம். முரளி.

TNSTC அரசு வழக்கறிஞர்கள் பாலமுருகன் ஜெகதீசன் நாகராஜன் ஹக்கீம், அணி அமைப்பாளர்கள் துரை கோபால்சாமி. கண்ணன். வெள்ளத்துரை. முனியசாமி. பா மணிகண்டன். கந்தசாமி(எ) செல்வம் காமாட்சி. ராஜா. வினோத் பாலா செல்லப் பாண்டி. M. ராம் பிரசாத் தமிழ் சந்திரன். ராஜா. மணி புல்லட் மணி .சந்தான பாண்டியன் .சித்திக் அமீன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

பி.எம்.ராஜரத்தினம் எஸ்.எம்.ரபீக் புதூர் முத்துராமன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### நெல்லை மாநகரப் பகுதியில் - ஆதி திராவிடர் நலத்துறை சார்பில்

# ரூ.1 கோடி மதிப்பில் சமுதாய நலக் கூடம்!

## அந்தியூர் செல்வராஜ் எம்.பி. - மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டனர்!

நெல்லை, ஆக. 22 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்டம் நெல்லை மாநகரப் பகுதியில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் ரூபாய் 1 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள நவீன சமுதாய நலக்கூடம் இடங்களை கழக துணை பொதுச் செயலாளர்,எஸ்.சி.எஸ்.டி. நல வாரிய உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி, பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் முன்னிலையில் நேரில் சென்று பார்வையிட்டார்.

அதன்படி கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. தச்சை மண்டலம் இளங்கோநகர் குட்டத்துறையில் இடத்தை பார்வை யிட்டார்,பாளை மண்டலம் வார்டு அலுவலகம் காமராஜர் காலனி சமுதாயக் கூடத்தை(சமாதானபுரம்) பார்வையிட்டார். தொடர்ந்து மேலப்பாளையம் மண்டலம் வீரமாணிக்கபுரம்,மேலப்பாளையம் மற்றொரு பகுதி ஆகிய 4 இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் கழக துணைப் பொதுச் செயலாளர்,எஸ்.சி.எஸ்.டி.நலவாரிய உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பு ஏற்ற காலத்தில் இருந்து இன்று வரை பல்வேறு திட்டங்களை அறிவித்து அதனை நடைமுறைப் படுத்தியும்,அந்தத் திட்டங்களின் பலன்கள் மக்களுக்கு முழுமையாக சென்றடையும் வகையில் அதில் முதலில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.முதலமைச்சர் அவர்களின் பல்வேறு திட்டங்களின் மூலம் ஏழை, எளிய, மக்கள் பெரிதும் பயன் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

அதுபோன்று ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் சிறப்பு திட்டமாக தமிழகம் முழுவதும் ஆதிதிராவிடர்,பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் அந்த மக்கள் பயன்பெறும் வகையில் இடங்களை தேர்வு செய்து தலா 1 கோடி ரூபாய் மதிப்பில் நவீன வசதியுடன் 100 சமூதாய நலக் கூடங்களை கட்ட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி நெல்லை மாநகரப் பகுதியில் 4 இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தேன். பார்த்த 4 இடங்களிலும் போதுமான இடவசதி உள்ளது.இதுவும் முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமாகும்.இது குறித்து அரசுக்கு பரிந்துரைப்போம்.ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார்கள்.

இவ்வாறு அந்தியூர் செல்வராஜ் எம்.பி. தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மண்டல தலைவர்கள் ரேவதி (தச்சை)கதீஜா இக்லாம்பாசிலா, (மேலப்பாளையம்) பகுதி செயலாளர் துபாய் சாகுல்,மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர் சங்கர்,சுந்தர்,முகைதீன் அப்துல்காதர்,கிருஷ்ணதாய், மாநகர துணை செயலாளர் பிரபு, வழக்கறிஞர் தினேஷ், பொறியாளர் அணி சாய் பாபா, முத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி தெற்கு மாவட்ட கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தேனி, ஆக. 22 -

தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம். நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

16.08.2024 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு தளபதி அவர்களின் அறிவுத்தலின்படி



தேனி தெற்கு மாவட்டக் கழக கூட்டம். எதிர்வரும் 23.08.2024 ம் தேதி வெள்ளிக்கிழமை , காலை 10.00 மணிக்கு சின்னமனூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள மாயாண்டி பிள்ளை திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.மனோகரன் அவர்கள் தலைமயில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு.ச உள்ளிட்ட பேரவை நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், தொண்டர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

### மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஆக 22 -

மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வரும் 29ஆம் தேதி நடைபெறும் என்றும் இதில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை ஆற்ற உள்ளார் என தமது அறிக்கையின் மூலம் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:

சென்னையில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பிரம்மாண்ட வெற்றி பெற்



றதற்கு கழக தலைவருக்கு நன்றி தெரிவித்தல்,

கழகத்தின் பவள விழாவை வரவேற்கும் வகையில் கொண்டாடப் பட உள்ள முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இந்த தீர்மானங்களை விளக்கும் வகையிலும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.வின் பொது உறுப்பினர்கள் குழு கூட்டம் திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடியில் அமைந்துள்ள பொன் வைரமுத்து திருமண மஹாலில் வருகிற 29.08.2024 வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளார்.

இதில் தெற்கு மாவட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள்,கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.